ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2078/51 - 2018 ජූලි මස 06 වැනි සිකුරාදා - 2018.07.06

*2078/51 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 9/ 2011.*

**1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டம்**

72 ஆம் பிரிவின் கீழான கட்டளை

*1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 71 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட்ட 72 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மங்கள சமரவீர ஆகிய நான், இதற்கான அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனங்களை, 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 06 ஆந் திகதி தொடக்கம் 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட மக்கள் வங்கிக்கு இக்கட்டளை மூலம் உரித்தாக்குகின்றேன்.*

*மங்கள சமரவீர,*
*நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்.*

கொழும்பு,
*2018, யூலை 06.*

**அட்டவணை**

தென் மாகாணம், காலி மாவட்டத்தில் பெந்தர - வலல்லாவிட்ட கோரளேயில் எல்பிட்டிய பிரதேச செயலாளர் பிரிவில், இல. 94, அம்பன கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ளதும் 414393 ஆம் இலக்க உரித்து வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டுள்ளதும் “பன்விலே கும்புர” எனவழைக்கப்படும் காணியிலிருந்து பிரிக்கப்படாத ஆறிலொரு பங்கு (1/ 6), பதினாறிலொரு பங்கு (1/ 16) மற்றும் எட்டிலொரு பங்கு (1/ 8) அடங்கலும் ; அதன் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : ஒற்றையடிப் பாதை ; கிழக்கு : வீதியும், 331300, 327968 மற்றும் 390496 ஆம் இலக்க உரித்து வரைபடங்களில் குறித்துக்காட்டப்பட்ட காணிகளும், 122 1/ 2 ஆம் இலக்கக் காணித்துண்டும் ; தெற்கு, மேற்கு : பெலிகஸ்யாய கால்வாய். பரப்பளவில் இது, அதன் மீதுள்ள எல்லாவற்றுடனும் ஒரு ஏக்கர் இரண்டு றூட் பதினாறு பேர்ச்சஸ்களைக் (1ஏ. 2றூ. 16பே.) கொண்டுள்ளது.

மேற்கூறப்பட்ட பிரிக்கப்படாத காணிக்காக உரிமம்பெற்ற நில அளவையாளர் எம். ஆரியசேன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2007.08.27 ஆந் திகதிய $2919^{B}$ ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்ட காணித்துண்டு இல. $121^{D2}$ பரப்பளவில் 90.66 பேர்ச்சஸ்களைக் கொண்டுள்ளது.

இக்காணி, பலப்பிட்டிய காணிப்பதிவகத்தில் பக்கம் B 539/ 169 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

*07-650*

1A - PG 4104 — 107 (2018/07) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.